

1

# கல்வி

*'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு*
*மாடல்ல மற்றை யவை'*

என்கிறார் திருவள்ளுவர்.

ஒருவருக்கு அழியாத சிறந்த செல்வம் கல்வியே, பிற செல்வங்களெல்லாம் அத்துணை சிறப்பு வாய்ந்தன அல்ல என்று கூறுகிறார்.

மற்ற எல்லாச் செல்வங்களையும் நாம் காப்பாற்ற வேண்டும். ஆனால் கல்விச் செல்வம் நம்மைக் காப்பாற்றும்.

வாழ்நாள் முழுவதும் நாம் கற்பவர்களாக இருந்தாலும் இளமைப் பருவத்தில் கற்பது ஒன்றே நோக்கமாக இருக்க வேண்டும். ஏனெனில் இளமையில் எதையும் கிரகிக்கும் ஆற்றல் அதிகமாக காணப்படும். மனம் அடங்கக் கற்பதே கல்வி. மனதிற்கு சிறந்த உணவு நல்ல எண்ணங்கள்.



'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்' என்பதால் இளமையிலேயே மனதில் நல்ல எண்ணங்களைத் தோற்றுவிக்கும் கல்வியைப் பெற வேண்டும். இத்தகைய கல்வி பண்பாட்டுக் கல்வி எனப்படும். இக்கல்வியே அறிவுடைமைக்கு காரணமாக அமைகிறது.

ஒவ்வொருவரிடமும் உள்ள திறமைகளை வெளிப்படுத்தி, அவற்றை வளர்க்க உதவும் கல்வியை திறன் வளர் கல்வி எனக் குறிப்பிடலாம். இதுவும் முக்கியமானதே. ஆனால் பண்பாடு இல்லாதவனிடம் இருக்கும் இத்தகைய கல்வி பைத்தியக்காரனிடம் இருக்கும் வாளைப் போன்றது எனலாம். "வளமான, ஒளிமயமான இந்தியாவைப் படைக்க ஆரம்பக்கல்வி வரையிலாவது பண்பாட்டைப் போதிக்கும் கல்விமுறை அமல்படுத்தப்பட வேண்டும்," என்று நமது குடியரசுத் தலைவர் டாக்டர். அப்துல் கலாம் அவர்கள் கூறியுள்ளது பண்பாட்டுக் கல்வியின் அவசியத்தை உணர்த்துகிறது.

பெரியோரை மதித்தல், குடும்பத்தில் அன்பைப் பரிமாறிக்கொள்ள முக்கியத்துவம் கொடுத்தல், பிறரிடம் எதிர்பார்ப்பு இன்றி பழகுதல், நம் சிந்தனைகளை நம் உயர்வுக்கும் பிறர் உயர்வுக்கும் செலவழித்தல், அனைவரிடமும் அன்பு காட்டுதல், சினம் தவிர்த்தல், உண்ட உணவு செரிக்க உழைத்தல், தன்னம்பிக்கை, இறை நம்பிக்கையுடன் செயல்படுதல், பலப்பல நல்ல விஷயங்களை மனதில் பதித்தல் போன்றவற்றிற்குக் காரணமாவது பண்பாட்டுக் கல்வி. இளைய தலைமுறையினருக்கு இக்கல்வியை அளிப்பதில் முக்கியத்துவம் காட்டாததன் விளைவுதான் இன்றைய சீரழிவு.

இரயிலில் 'ஊனமுற்றோர் இடம்' என்பதைப் படித்தறிய உதவுவது திறன் வளர் கல்வி, அங்கு அமராமல் அவர்களுக்கு

இடமளிக்கச் செய்வது பண்பாட்டுக் கல்வி. 'புல் தரையில் நடக்காதீர்கள்' என்பதைப் புரிந்து கொள்ளச் செய்வது திறன்வளர் கல்வி, அந்த அறிவிப்பை மதித்து அதில் நடக்காமல் இருக்கச் செய்வது பண்பாட்டுக் கல்வி. நன்மை தீமைகளை அறியச் செய்வது திறன்வளர் கல்வி, நன்மையில் மட்டும் நாட்டம் கொள்ளச் செய்வது பண்பாட்டுக் கல்வி.

பண்பாட்டைப் போதிப்பதே சமய இலக்கியங்களின் உன்னத நோக்கமாகும். வீடும், சமய நிறுவனங்களும், ஆலயங்களும் இப்பணியைச் செய்து வருகின்றன. நமது நாடு மதச்சார்பற்ற நாடாக உள்ளதால் பள்ளிகளில் இலக்கியக்கல்வி மூலமே பண்பாட்டைப் போதிக்க முடிகிறது. ஒவ்வொரு மொழியிலும் உள்ள இலக்கியங்கள் மக்களை நல்வழிப்படுத்தவே ஏற்பட்டன. இலக்கிய வளத்தில் நம் தமிழ் மொழி முதலிடம் வகிக்கிறது. குழந்தைகள் உள்ளத்தைப் பண்படுத்த இலக்கியப் பாடல்கள் உதவுவதுடன் அவற்றை மனப்பாடம் செய்வதால் அவர்களின் நினைவாற்றலும் அதிகரிக்கிறது, திறன் வளர் கல்வியிலும் அவர்கள் மேம்பட முடிகிறது.

"குழந்தைகளைத் தமிழிலக்கியப் பாடல்களை மனப்பாடம் செய்ய வையுங்கள், அவர்கள் மேன்மையுடன் வாழ்வார்கள்," என்கிறார் மரபியல் துறை விஞ்ஞானி டாக்டர். மாரிமுத்து அவர்கள். ஒவ்வொரு மொழியிலும் இத்தகைய இலக்கியங்கள் உள்ளன. அவரவர்க்கு எளிதான மொழியிலுள்ள இலக்கியப் பாடல்களை மனப்பாடம் செய்து அவற்றின் கருத்துகளை உள்ளத்தில் மனப்படமாகப் பதிய வைப்பதே பண்பாட்டுக் கல்வியின் முக்கியப் பணியாகும். மனப்படங்கள் ஏற்படுத்தும் பதிவுகளே இயல்பை நிர்ணயிக்கின்றன.

உடலும் உயிரும் சேர்ந்திருந்தால்தான் உயிரோட்டமுள்ள வாழ்க்கை நடைபெறும். பண்பாட்டுக் கல்வி உயிர் போன்றது, திறன்வளர்கல்வி உடல் போன்றது. உயிரற்ற உடலில் எந்த இயக்கமும் நடைபெறாது. அதுபோல பண்பாடற்ற திறமையால் எந்தப் பயனும் ஏற்படாது. பண்பாட்டுக் கல்வியுடன் சேரும்போதுதான் திறன் வளர் கல்வியின் முழுப்பயன் கிடைக்கும்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது அவருடைய புதல்வர்களுக்கு சிறந்த கல்வி கிடைக்க வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. 'தினமும் ஒரு மணி நேரம் என் புதல்வர்களுடைய இலக்கியப் படிப்புக்கு நான் செலவழித்திருந்தால் மிகச்சிறந்த படிப்பை நான் அவர்களுக்கு அளித்திருந்திருப்பேன்' என்று காந்தியடிகள் கூறுவதுண்டு.

விலங்குத்தன்மை, மனிதத்தன்மை, தெய்வத்தன்மை என்ற மூன்று தன்மைகளும் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு விகிதங்களில் கலந்துள்ளன. சூழ்நிலையைப் பொருத்து இந்த விகிதம் அவ்வப்போது மாறுவதுண்டு. முழுவதுமான நல்லோரும் இல்லை, முழுவதுமான தீயோரும் இல்லை. நம்மிடமுள்ள விலங்குத்தன்மை குறையவும், மனிதத் தன்மை மலரவும், அது மேலும் தெய்வத்தன்மையாக உயரவும் வழி வகுப்பது பண்பாட்டுக் கல்வியே. இத்தகைய மாற்றத்திற்கு (transformation) உதவக்கூடிய கல்விக்கு வாய்ப்பில்லாமல் செய்துவிட்டு, தகவல்களைத் (informations) திரட்டி அளிக்கும் இயந்திர ரீதியான கல்விக்கு அதிக முக்கியத்துவம் தருவதைத் தவிர்க்க வேண்டும். மனிதத்தன்மை மேலோங்காமல் பெறுகிற அறிவும் ஆற்றலும் மனிதனை சாத்தானாக்கி விடும். ஆகவே கல்வி பண்பாட்டில் தொடங்கி திறனில் தொடர வேண்டும்.

இன்றைய உலகம் செல்லும் வேகத்தில் திறன்வளர் கல்விக்கே முழு முக்கியத்துவம் தரப்படுகிறது. அதன் விளைவால் நாம் இழந்தவை ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல! வேகமாகச் செல்லவேண்டியுள்ளதால் முன் எப்போதையும்விட இப்போதுதான் பண்பாட்டுக் கல்வியின் தேவை அதிகம் எனலாம். திறன்வளர் கல்வியை மாத்திரமே பெறும் வாய்ப்புள்ள இளைய தலைமுறையினர் ஒற்றைக் காலால் நடப்பதுபோலத் தடுமாறுகின்றனர்.

குழந்தைகளின் திறன்களை வளர்க்க எவ்வளவு நேரத்தையும், பணத்தையும் செலவழிக்கிறோம்! எளிய நன்னெறிப் பாடல்கள், அறநெறிக் கதைகள், தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் போன்றனவற்றைச் சொல்லிக் கொடுக்கவும் சிறிது நேரத்தை ஒதுக்க வேண்டும். அவர்களைச் சிந்திக்க வைத்து, திரும்பச் சொல்ல வைக்க வேண்டும். நன்மையின் மீது நாட்டத்தை ஏற்படுத்துவதும், தீமையை எதிர்க்கும் துணிவைத் தருவதும் பண்பாட்டுக்கல்வியே எனலாம். இளமையில் இதை ஒதுக்கி திறன்வளர் கல்வியை மட்டும் தருவது எப்படியிருக்கிறதென்றால் ஆறுமாதக் குழந்தைக்கு பாலைப் புகட்டாமல் பிரியாணியை ஊட்டுவது போலுள்ளது.

*கற்க கசடற கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

என்கிறார் உலகவர். கற்க வேண்டிய நூல்களைத் தெளிவாகக் கற்று, அவை உணர்த்தும் நெறிப்படி வாழ வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுவதால் பண்பாட்டுக் கல்வியையே அவர் குறிப்பிடுவது புலனாகிறது. நிறைய நூல்களைக் கற்க வேண்டும் என அவசரமாக, அரைகுறையாகப் படிப்பதை விட, தரமான சில

நூல்களைத் தெளிவாகக் கற்று, கற்றதை சிந்தித்து, பின்பற்றி வாழ்வதே உன்னத வாழ்க்கையாகும். தேடலிலேயே காலத்தை வீணாக்கிக் கொண்டிருந்தால் நடைமுறைப்படுத்துவது சாத்தியமாகாது.

ஒவ்வொருவருக்கும் இயற்கையே ஆசானாக விளங்கி புகட்டும் கல்வி அனுபவக்கல்வி எனப்படும். அனுபவம் என்ற பல்கலைக்கழகம் கற்றுக் கொடுக்கும் பாடத்தை அறிவுரை கொடுக்காது. நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வேறுபாட்டை எளிதில் புரிய வைப்பது அனுபவக்கல்வி. விழிப்புடன் இக்கல்வியைப் பெற்றவர்கள் வாழ்வில் தோல்வி என்பதே ஏற்படுவதில்லை.

பண்பாட்டுக் கல்வி, திறன் வளர் கல்வி, அனுபவக் கல்வி - இவை மூன்றையும் பெறுபவர்கள் நமது குடியரசுத் தலைவர் டாக்டர். அப்துல் கலாம் அவர்களைப் போல சாதனைகள் படைக்கும் மா மனிதர்களாகின்றனர்.





# 2

# வெற்றியின் படிகள்

*'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு'*

மணற்கேணி தோண்டத்தோண்ட நீர் தரும். அதுபோல நூல்கள் கற்கக் கற்க அறிவு பெருகும் என்று அன்றே எழுதி வைத்தார் நமது அறவியலார் திருவள்ளுவர். மூளையைப் பயன்படுத்தப் பயன்படுத்த திறமை பெருகும் என்கின்றனர் இன்றைய அறிவியலார்.

வெற்றியை நாடும் முன் வெற்றி பெற உதவும் மூளையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். உறுதியான மண்டையோட்டிற்குள் மூன்று உறைகளால் சூழப்பட்டு பத்திரமாக வைக்கப்பட்டிருக்கும் மூளைக்கு புரதச்சத்து அதிகம்



தேவை. பயத்தம் பருப்பு போன்ற பருப்பு வகைகள், பாதாம் போன்ற கொட்டை வகைகள், பால், தயிர், கீரை போன்றவை மூளையின் செயல்திறனை அதிகரிக்கின்றன என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இனிப்பு வகைகள் நினைவாற்றலைக் குறைப்பதாகக் கருதப்படுகிறது.

பெருமூளையின் மேற்புறம் சிறு சிறு மேடுபள்ளங்கள் வரிகளைப் போன்று காணப்படும். மூளையைப் பயன்படுத்தப் பயன்படுத்த வரிகளின் எண்ணிக்கை அதிகமாகும் என்பது இன்றைய கண்டுபிடிப்பு. மூளையை பயன்படுத்தாதவர்களுக்கு வரிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால் மேற்பகுதி மழு மழுவென இருக்கும். இந்த உண்மையை நம் முன்னோர்கள் அறிந்திருந்ததால் தான் 'உன் மண்டையிலே களிமண் (மழு மழுப்பாக உள்ளது) உள்ளதா' எனக் கேட்கும் வழக்கம் ஏற்பட்டதோ!

மூளையைப் பயன்படுத்துதல் என்றால் என்ன? நன்றாக சிந்தனை செய்வது என்பதுவே. வாசிப்பதைவிட மூன்று மடங்கு நேரம் யோசித்தால் வாசித்தது அப்படியே பதிவாகும். 'சிந்தனை செய்வது' திறமையை வெளிப்படுத்தும் எளிய முறையாகும். 'கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு,' என்பது வழக்கில் இருக்கும் சொற்றொடர். ஆகவே வெற்றியை விரும்புவோர் மூளையை முதல் நண்பனாகக் கருத வேண்டும்.

அடுத்ததாக மாணவர்கள் வகுப்பறைக்கும் வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிவதும் அவசியமாகிறது. வகுப்பறையில் முதலில் பாடம் கற்பிக்கப்படுகிறது, பிறகு தேர்வு வைக்கப்படுகிறது. ஆனால் வாழ்க்கையில் முதலில் தேர்வு நடத்தப்படுகிறது, அதிலிருந்து பாடம் கற்பிக்கப்படுகிறது. இரண்டையும் எப்படிக் கற்றுக் கொள்கிறோம் என்பதைக்

கொண்டு வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படுகிறது. இளைய தலைமுறையினர் வகுப்பறையிலும் வெற்றி பெற வேண்டும், வாழ்க்கையிலும் வெற்றி பெற வேண்டும்.

வெற்றியின் படிகள் 6.

அவை யாவன :

1. இலக்கை நிர்ணயித்தல்
2. திட்டமிடுதல்
3. ஈடுபாட்டுடன் கற்றல்
4. ஒருமுகப்படுத்தி கற்றல்
5. தொடர் முயற்சியும் பயிற்சியும்
6. விளைவைப்பற்றி கவலைப்படாமை.

### *இலக்கை நிர்ணயித்தல்:*

இலட்சிய வாழ்க்கைக்கு இலக்கு மிகவும் இன்றியமை யாதது. ஒரு வார விடுமுறையை வெளியே சென்று கழிக்க விரும்பினால் நாம் முதலில் செய்வது எங்கு போவது என்பதைத் தீர்மானிப்பதுதான். உடல் நிலை, பொருளாதார நிலை, குடும்பத்தினர் விருப்பம், தட்பவெப்ப நிலை போன்ற பல வற்றைச் சிந்தித்துப் பார்த்து போகும் இடத்தை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. எதைப் பற்றியும் சிந்திக்காமல் பேருந்து நிலையத்திற்குச் சென்றபிறகு எந்த ஊருக்குச் செல்லும் பேருந்தில் ஏறலாம் என்றா தடுமாறுகிறோம்? ஒருவார விடுமுறையைக் கழிக்கவே இலக்கை நிர்ணயிக்க வேண்டி யுள்ளதே, நம் வாழ்க்கையைக் கழிக்க இலக்கு இல்லாமல் முடியுமா?

மாணவர்கள் தங்களிடத்திலுள்ள திறமைகளைச் சரியாகப் புரிந்து கொண்டு இலக்கை நிர்ணயிக்க வேண்டும். இலக்கு இல்லாத வாழ்க்கை மாலுமி இல்லாத கப்பல் போன்றது. பெற்றோர், நலம் நாடுவோர் ஆலோசனைகளையும் கேட்டறிந்து சரியான இலக்கைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான் பொறுப்பாகச் செயல்பட முடியும்.

## திட்டமிடுதல்:

மாணவர்கள் தங்கள் இலக்கைத் தீர்மானித்த பிறகு அந்த இலக்கை அடையத் திட்டமிட வேண்டும். திட்டமிடத் தவறினால், தவறுவதற்குத் திட்டமிட்டது போலாகும். இளமைப் பருவம் என்பது வாழ்க்கையின் அஸ்திவாரமாகிறது. அதைத் திட்டமிட்டு செலவழிப்பது நல்வாழ்க்கையின் அஸ்திவார மாகிறது. திட்டமிடச் சிந்திக்க முடியாத வயதும் அதுவே, கண்டிப்பாகத் திட்டமிடச் சிந்திக்க வேண்டிய வயதும் அதுவே.

காலத்தின் அருமையை உணர்ந்தால் வாழ்வின் இனிமையை நுகர முடியும். ‘காலமே கடவுளாகக் கண்டனம் தொழிலுக்கு’ என்பர். கடவுளுக்கு அடுத்தபடியாக காலத்தை மதித்து வாழ வேண்டும். போனால் திரும்பி வராதன காலமும் ஆற்று நீரும். 'Time management' பற்றிய வகுப்புகள் இக்காலத்தில் ஆங்காங்கு நடத்தப்படுவது வரவேற்கத்தக்கது.

மாதச் சம்பளம் வாங்கியவுடன் முதலில் சேமிப்பு உட்பட அத்தியாவசியத் தேவைகளுக்கு எடுத்து வைத்து விட்டு மீதி யிருந்தால் அதையே ஆடம்பரச் செலவுகளுக்கு ஒதுக்குகிறோம். அதுபோல மாணவச் செல்வங்கள் அத்தியாவசிய வேலைகளுக்கு முதலில் நேரத்தை வகுத்துக் கொண்டு மீதியுள்ள நேரத்தையே பிறவற்றிற்குச் செலவழிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மண

அழுத்தம் ஏற்படாமல் கடமைகளைச் செவ்வனே செய்ய முடியும், திறன்களை வெளிப்படுத்தி முன்னேற முடியும்.

'Sleep is the mother of fresh thoughts' என்பதால் மாணவர்கள் தினமும் குறைந்தது 6 மணி நேரமாவது தூங்க வேண்டும். அதிகபட்சம் 7மணி நேரம். அதற்கு மேலும் தூங்கினால் மூதேவியின் கையில் அகப்பட்டு சர்வ நாசம்தான் விளையும். தூங்கும் நேரம், பள்ளி நேரம் தவிர்த்து மீதியுள்ள நேரத்தை அந்தந்த வேலைக்கு என பிரித்துக் கொள்ள வேண்டும். அவரவர் குடும்ப சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு Time chartயை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

1. பண்பாட்டுக் கல்வியில் உள்ளடங்கிய இலக்கியக் கல்வி, சமயக் கல்வி, நன்னெறிக் கதைகள், இறைவழிபாடு போன்றவற்றுக்கும்,

2. பள்ளிப் பாடங்கள், பிற திறமைகள் ஆகியவற்றை அடக்கிய திறன் வளர் கல்விக்கும்,

3. வியர்வை வெளியேறும்படி செய்யும் உடற்பயிற்சி, விளையாட்டு, உடலுழைப்பு போன்றவற்றிற்கும்,

4. குடும்பத்தினருடன் கலந்து உரையாடி மகிழ்வதற்கும்,

5. அன்றாடச் செயல்களின் குறை நிறைகளை சிறிது சிந்தித்துப் பார்ப்பதற்கும்,

6. தினசரி ஒரு சிறிய உதவியை தேவைப்படுபவர்களுக்குச் செய்வதற்கும்.

7. பொழுது போக்கிற்கும்,

என இருக்கும் நேரத்தைப் பிரித்துக் கொள்ள வேண்டும். இதில் சுய தேவை பூர்த்திக்கான நேரமும் அடங்க வேண்டும். அவரவர்

வயது, படிக்கும் வகுப்பு ஆகியவற்றைப் பொருத்து பிரிக்கப்படும் நேரத்தின் அளவு சிறிது மாறுபடும். இவ்வாறு செய்தால் காலம் விரயமாவது தடுக்கப் படும். (பொழுதுபோக்கும் ஆக்கபூர்வமானதாக இருக்கவேண்டும்.)

மாணவச் செல்வங்களே, பள்ளியில் வருகைப் பதிவு எடுக்கும் போது Present (உள்ளேன்) என்று கூறுகிறீர்கள் அல்லவா? Present என்ற வார்த்தையின் மற்றொரு பொருள் பரிசு. இப்போது நாம் வாழும் நேரம் இறைவன் நமக்குத் தந்துள்ள பரிசு. இந்தப் பரிசுக்கு நாம் எப்படி நன்றி கூற முடியும் தெரியுமா? அதைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம்தான். இதுவே மிகச்சிறந்த நன்றி வழிபாடு. ஒரு நாளைக்கு நமக்குத் தரப்பட்டுள்ள 86400 வினாடிகளை சரியாகப் பயன்படுத்தினால் இறையருளும் சேருவதால் திறமையை வளர்த்துக் கொள்ளுதல் எளிதாகிறது. சோம்பியிருந்தால் வெம்பிப் போக நேரிடும், ஏனெனில் சோம்பேறியின் உள்ளம் சாத்தானின் உறைவிடமாகிறது.

திட்டமிட்ட வாழ்க்கை கட்டுப்பட்டதுபோலத் தோன்றுகிறதா? தனக்குத்தானே கட்டுப்பாட்டை விதித்துக் கொள்கிறவனே உண்மையான சுதந்திர மனிதன். மேலும் கட்டுப்பாடு என்னும் நெருப்பில்தான் திறமை நன்றாக ஒளி விடும். நமது அன்றாடச் செயல்களை நினைத்துப்பார்க்க சிறிது நேரத்தை ஒதுக்கும்போது நமது குறைகளைக் களைய முடியும். கற்பாறையில் தேவையில்லாதவற்றை நீக்கும்போது கற்சிலை உருவாகி அனைவரும் வணங்கத்தக்கதாகிறது. அதுபோல நம்மிடமுள்ள குறைகளை சிறிதுசிறிதாக நீக்கும்போது உலகிற்குப் பயனுடையவர்களாகி நாமும் பயனடைவோம்.

ஒரு நாளைச் செலவிடத் திட்டமிட்ட பிறகு வாரத்திட்டம், மாதத்திட்டம், ஆகியவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும். இந்த வாரத்தில், இந்த மாதத்தில் இந்த இந்தப் பாடங்களைப் படித்து முடித்து விட வேண்டுமென திட்டமிட வேண்டும். ஆண்டுத்தேர்வுக்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்னரே தயாராகி விடக் கூடிய அளவில் திட்டமிட வேண்டும்.

கற்றல் 5 பகுதிகளாக நடைபெற வேண்டும். 1. எடுத்துக் கொண்ட பாடப் பகுதியை பலமுறை படித்து, புரிந்து கொண்டு குறிப்புகளை எடுக்க வேண்டும். 2. எழுதி வைத்துள்ள குறிப்புகளை பல முறை படித்து மனதில் பதிய வைக்க வேண்டும். 3. அந்தக் குறிப்புகளை திருப்பத்திரும்ப யோசிக்க வேண்டும். 4. அவற்றை நினைவு கூர்ந்து எழுதிப் பார்க்க வேண்டும். 5. எழுதியவை சரியாக உள்ளதா எனச் சரிபார்க்க வேண்டும். விடைகள் சரியாக இருந்தால் அடுத்த பகுதிக்குச் செல்ல வேண்டும், இல்லையென்றால் மீண்டும் குறிப்புகளை படிப்பதிலிருந்து ஆரம்பித்து முடிக்க வேண்டும். இந்த முறையில் படித்தால் கற்றலில் எந்தச் சிரமமும் இருக்காது. மேலும் சிறப்படைய வேண்டுமென்றால் கூடுதலாக ஒரு செயலைச் செய்யலாம். ஆசிரியர் ஒரு பாடத்தை நடத்தும் முன்பாகவே நாம் அதைப் படித்துப்பார்த்துப் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். புரியாத பகுதிகளை ஆசிரியர் நடத்தும்போது கூர்ந்து கவனித்துப் புரிந்து கொள்ள வேண்டும். இவ்விதம் கற்றால்தான் 'கசடற கற்க' என்ற வள்ளுவர் வாக்கினை கடைப்பிடித்தது போலாகும். அற்புதமான குறள் அது.

'கற்க கசடற கற்பவை' என்ற மூன்று வார்த்தைகள் மூன்று உண்மைகளை உணர்த்துகின்றன. ஒவ்வொரு வார்த்தையுடனும் முதலிலுள்ள கற்க என்ற வார்த்தையைச் சேர்த்துப் பார்க்கலாம்.

1. கற்க கற்க - நமது அறியாமையை நீக்குவதற்காக, கற்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் கற்க வேண்டும்.

2. கசடற கற்க - கற்றதில் ஐயம் ஏதும் இல்லாதவாறு புரிந்து கற்க வேண்டும்.

3. கற்பவை கற்க - கற்க வேண்டியவற்றை மட்டுமே கற்க வேண்டும். நல் வாழ்க்கைக்கு அவசியமில்லாதவற்றை, மனதில் மாசு உண்டாக்குவனவற்றை கற்கக் கூடாது.

மாணவர்களே, எதைக் கற்க வேண்டும், எப்படி கற்க வேண்டும் எனவும் திட்டமிடுங்கள். திட்டமிடாத வாழ்க்கை நூலறுந்த காற்றாடி போன்றது, பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டு விடுபட முடியாமல் போய் விடும். மகாபாரதத்தில் ஒரு சமயம் 'எந்த நஷ்டத்தை ஈடு செய்யவே முடியாது?' என்று தருமரிடம் கேட்டபோது 'வீண் பொழுது போக்குவதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்யவே முடியாது,' என்று பதிலளித்தார்.

திட்டமிடா விட்டால் வீண் பொழுது போக்குவதைத் தவிர்க்க முடியாது. திட்டமிட்டால் மட்டும் போதாது, அதை உடனே செயல்படுத்தவும் வேண்டும். இரண்டுக்கும் இடையேயுள்ள இடைவெளி மிகக் குறைவாக இருக்க வேண்டும். அதேபோல சிந்தனை செய்தல் மிக முக்கியமானது. உயிரினங்களுக்கு சுவாசித்தல் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கற்றலில் யோசித்தல். வாசித்துக் கொண்டேயிருந்துவிட்டு தேர்வு எழுதப்போவது எப்படி இருக்குமென்றால் நீந்துவது எப்படியென்று பல புத்தகங்களைப் படித்து விட்டு தனியாகக் கிணற்றில் குதிப்பதைப் போன்றது. நீந்தும் பயிற்சியின்றி நீந்த முடியாது. அதுபோல படித்தவற்றை யோசித்துப் பார்க்கும் பழக்கத்தை மூளைக்குத் தராமல் தேர்வைச்

சரியாக எழுத முடியாது. உழுகிற நேரத்தில் ஊர் சுற்றி விட்டு அறுவடை நேரத்தில் அரிவாள் எடுத்துச் சென்றால் அறுவடை செய்ய முடியுமா? சிந்திக்கவும். படித்ததை அவ்வப்போது எழுதிப் பார்க்க நேரத்தை ஒதுக்கி, மூளைக்கு பயிற்சி அளித்தால் தேர்வை சந்திப்பது எளிதாகும்.

## *ஈடுபாட்டுடன் கற்றல் :*

Involvement makes you important என்பர். ஒரு செயலை ஈடுபாட்டுடன் செய்பவர் முக்கியத்துவம் பெறுவதைக் காண்கிறோம். செயலின் மீதுள்ள விருப்பமே ஈடுபாட்டை ஏற்படுத்தும்.

**'விரும்பி நின்றே செயில் மெய்த்தவராகும்,**
**விரும்பி நின்றே செயின் மெய்யுரை யாகும்,**
**விரும்பி நின்றே செயின் மெய்த்தவ மாகும்,**
**விரும்பி நின்றே செயில் விண்ணவ னாகுமே.'**

என்பது திருமந்திரப் பாடல். ஒரு செயலை விரும்பி முழு ஈடுபாட்டுடன் செய்யும்போது அது தவ வலிமை பெற்றதற்கு ஈடாகிறது, விண்ணுலக உயர்வை ஒத்த உயர்வைத் தரும் வலிமை பெறுகிறது.

மாணவர்கள் கற்கும் செயலைச் சுமையாகக் கருதாமல் சுகமாகக் கருதி கற்க வேண்டும். அப்போது கற்றல் கற்கண்டாய் இனிக்கும், 'மலை வாழையல்லவோ கல்வி' என்று நினைக்கத் தோன்றும். முழு ஈடுபாட்டுடன் கல்வி கற்றால் மாணவர்கள் முன்னேற்றத்திற்கு எதுவும் தடையாக இருக்க முடியாது. இவ்வாறு கற்று தடைகளைத் தகர்த்தெறிந்து சாதனை படைப்போர் பலர்.

பள்ளி ஆசிரியர் ஒருவரின் மகனாகப் பிறந்து, இளமையிலேயே தந்தையை இழந்து, தாயின் வளர்ப்பில்

சரியாக எழுத முடியாது. உழுகிற நேரத்தில் ஊர் சுற்றி விட்டு அறுவடை நேரத்தில் அரிவாள் எடுத்துச் சென்றால் அறுவடை செய்ய முடியுமா? சிந்திக்கவும். படித்ததை அவ்வப்போது எழுதிப் பார்க்க நேரத்தை ஒதுக்கி, மூளைக்கு பயிற்சி அளித்தால் தேர்வை சந்திப்பது எளிதாகும்.

### *ஈடுபாட்டுடன் கற்றல் :*

Involvement makes you important என்பர். ஒரு செயலை ஈடுபாட்டுடன் செய்பவர் முக்கியத்துவம் பெறுவதைக் காண்கிறோம். செயலின் மீதுள்ள விருப்பமே ஈடுபாட்டை ஏற்படுத்தும்.

**'விரும்பி நின்றே செயில் மெய்த்தவராகும்,**
**விரும்பி நின்றே செயின் மெய்யுரை யாகும்,**
**விரும்பி நின்றே செயின் மெய்த்தவ மாகும்,**
**விரும்பி நின்றே செயில் விண்ணவ னாகுமே.'**

என்பது திருமந்திரப் பாடல். ஒரு செயலை விரும்பி முழு ஈடுபாட்டுடன் செய்யும்போது அது தவ வலிமை பெற்றதற்கு ஈடாகிறது, விண்ணுலக உயர்வை ஒத்த உயர்வைத் தரும் வலிமை பெறுகிறது.

மாணவர்கள் கற்கும் செயலைச் சுமையாகக் கருதாமல் சுகமாகக் கருதி கற்க வேண்டும். அப்போது கற்றல் கற்கண்டாய் இனிக்கும், 'மலை வாழையல்லவோ கல்வி' என்று நினைக்கத் தோன்றும். முழு ஈடுபாட்டுடன் கல்வி கற்றால் மாணவர்கள் முன்னேற்றத்திற்கு எதுவும் தடையாக இருக்க முடியாது. இவ்வாறு கற்று தடைகளைத் தகர்த்தெறிந்து சாதனை படைப்போர் பலர்.

பள்ளி ஆசிரியர் ஒருவரின் மகனாகப் பிறந்து, இளமையிலேயே தந்தையை இழந்து, தாயின் வளர்ப்பில்

வறுமையின் வயப்பட்டு வளர்ந்த லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் கல்விமீது கொண்ட ஈடுபாடு வியக்கத் தக்கது. அவர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது நீண்ட தொலைவு நடக்க வேண்டியிருந்ததோடு இடையிலே ஒரு சிறிய ஆற்றையும் கடக்க வேண்டும். மழைக்காலங்களில் ஆற்றைக் கடக்க தோணிகளைப் பயன்படுத்துவார்கள். ஆனால் வறுமையில் வாடும் லால்பகதூர் சாஸ்திரிக்கு தோணியில் செல்வதென்பது இயலாத காரியம். அச்சமயங்களில் பள்ளிக்குச் செல்ல வேண்டாம் என்று தாய் சொன்னாலும் கேட்பதில்லை.

படிப்பில் மிகுந்த ஈடுபாடு உள்ள லால் பகதூர் சாஸ்திரி என்ன செய்வார் தெரியுமா? தனது சட்டையைக் கழற்றி அதில் புத்தகப்பையை வைத்து தலைமீது கட்டிக் கொண்டு நீந்திச் சென்று மறுகரையை அடைவாராம். அத்தகைய ஈடுபாட்டுடன் கற்றதால் தான் அவரால் கற்றபடி நிற்க முடிந்ததோ! நம் இந்தியத் தாயின் தவப்புதல்வர்களுள் அவர் ஒருவராவார். நேர்மையின் வடிவாகத் திகழ்ந்தவர். 20 மாதங்கள் நாட்டின் பிரதமராகப் பதவி வகித்தும் தன் குடும்பத்தார்க்கு சொற்ப அளவு கூட சொத்துச் சேர்க்காதவர். ஈடுபாட்டுடன் கற்றதால் எளிமையும் நேர்மையும் அவர் உறவானதோ!

மற்றொரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். படிப்பில் மிகுந்த ஈடுபாடு உள்ள ஒரு மாணவிக்கு படிப்பைத் தொடர முடியாத சூழல் ஏற்பட்டது. தந்தை அகால மரணமடைந்தார், வீட்டில் வறுமை, தந்தை வேலை செய்த இடத்தில் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை. பத்தாவது வகுப்பு வரை படித்திருந்த அந்தப் பெண் வேலை செய்து கொண்டே தபால் மூலம் பட்ட மேற்படிப்பு வரை படித்தாகி விட்ட பிறகும்

படிப்பில் ஆர்வம் குறையவில்லை. வேலையைச் செய்து கொண்டே முயன்று படித்து I.A.S. தேர்விலும் தேர்ச்சியடைந்து சாதனை படைத்து இன்று ஒரு மாவட்ட ஆட்சியராகத் திகழ்கிறார். குடும்பத்தினர் கண்ணீரைத் துடைத்த இவர் போன்றோரால்தான் இந்தியத் தாயின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும்.

ஒருவர் சாதனையாளராக மாறுவது வாய்ப்புகளாலும் வசதிகளாலும் அல்ல, ஈடுபாட்டுடன் தனது கடமையைச் செய்வதாலேயே என்பது தெரிகிறது. மாணவர்களின் தலையாய கடமை தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதாகும். அதை ஈடுபாட்டுடன் செய்தால் வாழ்க்கையில் நல்ல திருப்பம் நிச்சயமாக ஏற்படும்.

## ஒருமுகப்படுத்துதல் :

ஒரு செயலில் ஈடுபாட்டுடன் ஈடுபட்டாலும் அச்செயலின் வெற்றிக்கு மனதை ஒருமுகப்படுத்துதல் மிக அவசியமாகும். புறக்காரணங்களால் மனம் அலைக்கழிக்கப்படுவது இயல்பு. அதைத் தடுக்க மனஒருமைப்பாடு இன்றியமையாதது. எவ்வளவுக்கெவ்வளவு மனதை ஒருமுகப்படுத்துகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதன் வலிமை அதிகரிக்கிறது. சூரிய ஒளிக்கதிர்களை ஒரு குவிலென்சின் உதவியால் குவித்தால், அந்த லென்சின் முக்கிய குவியத்தில் வைக்கப்படும் காகிதம், சருகு போன்றவை எரியுமளவிற்கு வெப்பம் ஏற்படுகிறது. சூரிய ஒளிக்கதிர்கள் குவிக்கப்படும்போது ஆற்றல் அதிகரிப்பது போல மனம் ஒருமுகப்படும் போது அதன் ஆற்றல் அதிகரிக்கிறது.

மனதை ஒரு முகப்படுத்தும் தன்மையுடையோர் எப்படியிருப்பார்கள் என்பதை ஒரு பாடல் விளக்குகிறது.